யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி

தமிழ்மொழியும் இலக்கியமும்

முதலாந் தவணைப் பரீட்சை - 2020

தரம் :- 10 நேரம் :- 3.00 மணித்தியாலம்

## பகுதி - I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- ❖ மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

01. “அறியார் புல்லர் நலலோரை……..” இங்கு புல்லர் என்பதன் கருத்து,
    1. பெரியோர் 2. அறிவிலி 3. மூத்தோர் 4. நண்பர்

02. “அணிதேர் புரவி யா-பெரும் பண்டயொடு,” இங்கு புரவி என்பதன் பொருள்
    1. வண்டு 2. தவளை 3. யானை 4. குதிரை

03. நாயனையார் கேண்மை இதில் கேண்மை என்பதன் எதிர்ச்சொல்
    1. நட்பு 2. உரிமை 3. உறவு 4. பகைமை

04. “இரவாது தான் ஈதல்” இங்குஈதல் என்பதன் எதிர்ப்பதம்
    1. ஏற்றல் 2. வழங்குதல் 3. புகழ்தல் 4. ஒப்பிடுதல்

05. “மாணவனுக்கே உரியது பணிவு” மாணவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
    1. மாணாக்கி 2. மாணாத்தி 3. மாணவி 4. மாணாக்கினி

06. ஏலக்சன்-(Election)என்பதன் தமிழ்ச் சொல்
    1. கட்சி 2. தேர்தல் 3. செய்தி 4. உடைமை

07. யானை – பந்தி போல் ஆடு
    1. மந்தை 2. கும்பல் 3. தொகுதி 4. குழாம்

08. ஒருவர் இறந்த பின்பு அவரின் உறவினர்கள் அவரை நினைத்துப் புலம்புதல்
    1. தாலாட்டு 2. அங்கதம் 3. ஒப்பாரி 4. பல்லாண்டு

09. ஆட்டு மலம் பிழுக்கை என்பது போல ஒட்டகத்தின் மலம்
    1. எச்சம் 2. விட்டை 3. சாணம் 4. இலத்தி

10. பவளவிழா என்பது
    1. 25 ஆம் ஆண்டு நிறைவு விழா 3. 75 ஆம் ஆண்டு நிறைவு விழா
    2. 50 ஆம் ஆண்டு நிறைவு விழா 4. 80 ஆம் ஆண்டு நிறைவு விழா



kalvi.lk

11. ‘‘காத்து’’ என்பது எப்பிரதேச வழக்குமொழி

1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு

12. எதிர்ப்பொருளில் அமைந்த இணைமொழி

1. கொஞ்சிக்குலாவி 3. சீரும் சிறப்பும்
2. கண்ணும் கருத்தும் 4. அல்லும் பகலும்

13. தொனி , சத்தம், அரவம் ஆகிய பல சொற்கள் குறிக்கும் ஒரு சொல்

1. ஒளி 2. ஒலி 3. பாம்பு 4. பிணி

14. ‘காலில் விழுதல்’ என்ற மரபுத் தொடரைக் குறிப்பது

1. மன்னிப்புக் கேட்டல் 3. பிற்போடுதல்
2. உற்றுக் கேட்டல் 4. வாக்கு வாதம் செய்தல்

15. ‘‘தாவரம்’’ என்ற தொடரில் இடம்பெற்ற அணி

1. எதுகை 2. மேனை 3. சிலேடை 4. முரண்

16. ‘‘கதிரை’’ என்பதுஎம்மொழிச் சொல்

1. சிங்களம் 2. கன்னடம் 3. தெலுங்கு 4. போர்த்துக்கேயம்

17. அதிகாரம் பெற்றவரைக் குறிப்பது

1. விமர்சகர் 2. ஆணையாளர் 3. புலனாய்வாளர் 4. பேராசிரியர்

18. அவனின் கண்கள் பளபளவென மின்னின. பளபள என்பது

1. இரட்டைக்கிளவி 3. அடுக்கிடுக்குத்தொடர்
2. அடுக்குத் தொடர் 4. இணைமொழி

19. ‘க’கரம் மாறுபட்டு ஒலிப்பது

1. கடல் 2. மங்கை 3. கப்பல் 4. கதவு

20. பின்வருவனவற்றுள் பகுபதமாக அமைவது

1. நிலம் 2. நீர் 3. அரசன் 4. உரி

21. பெயரெச்ச விகுதியாக அமைவது

1. அ, உம் 2. இ, ஆ 3. உ, ய் 4. அல், கு

22. உயிர்க்குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை.

1. 7 2. 12 3. 5 4. 30

23. மாம்பழங்கள் விழுந்தது. எவ்வகை வழு

1. வினாவழு 2. திணைவழு 3. இடவழு 4. எண்வழு

24. ‘நுளம்பார் பேசினார்’என்பது

1. பால் வழுவமைதி 3. திணை வழுவமைதி
2. எண் வழுவமைதி 4. இட வழுவமைதி



kalvi.lk

25. நாளை விளையாட்டுப் போட்டி நடைபெறும் என்று அதிபர் கூறினார். இது எவ்வகை வாக்கியம்

1. தனிவாக்கியம்
2. கலப்பு வாக்கியம்
3. கூட்டு வாக்கியம்
4. எதிர்மறை வாக்கியம்

26. விருந்தினர்கள் நிகழ்விற்கு வந்தனர். இங்கு வந்தனர் என்பதன் வினை அடிச் சொல்

1. வா 2. போ 3. அர் 4. த்

27. கண்ணன் வீட்டை இடித்தான். இங்கு இடம் பெற்ற வேற்றுமை

1. முதலாம் வேற்றுமை
2. இரண்டாம் வேற்றுமை
3. மூன்றாம் வேற்றுமை
4. நான்காம் வேற்றுமை

28. அப்பா அன்போடு பேசினார் இங்கு இடம் பெற்ற அடைமொழிச் சொல்

1. அப்பா 2. அன்போடு 3. பேசினார் 4. ஓடு

29. கவிஞன் என்ற சொல் 'ஐ' உருபு ஏற்கும் போது ஏற்படும் வடிவம்

1. கவிஞன்ஐ 2. கவிஞன்னை 3. கவிஞனை 4. கவிஞனால்

30. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற தொகுதி

1. பெயர்ச்சொல் - மரம், கட்டில், போ
2. வினைச்சொல் - வா, போனான், விழுந்தான்
3. இடைச்சொல் - உம்,ஆல், ஆன
4. உரிச்சொல் - சால, உறு, தவ

31. யானைகள் கூட்டமாக ...........................

1. சென்றது 2. சென்றன 3. செல்கின்றது 4. செல்

32. கமலாபாடசாலைகளுக்கு செல்லவில்லை. கமலா பரீட்சை எழுதவில்லை மேற்படி வாக்கியங்களை இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆயினும் 2. ஆனாலும் 3. ஆகவே 4. என்றாலும்

33. சம்பள முரண்பாட்டை வலியுறுத்தி ஆசிரியர் .......................... போராட்டத்தில் ஈடுபட்டனர்

1. கோரிக்கை 2. கடமை லீவு 3. சுகயீனலீவு 4. முன்மொழிவு

34. ஆளும் கட்சியினர் தமது கொள்கைகளை

1. பிரசாரம் 2. பிரசுரம் 3. பிரச்சாரம் 4. பிரசங்கம்

35. நானும் நீயும் அவளும் பாடசாலைக்கு

1. செல்வீர்கள் 2. செல்வோம் 3. செல்வார்கள் 4. செல்வார்



kalvi.lk

தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

பூக்களிலே வாழைப் பூ
பூசிக்கும் பூவல்ல புசிக்கும் பூ
ஆடவர்க்கும் பெண்டிர்க்கும்
பொதுவாகப் பூக்கும் பூ

36. இப்பாடலில் சிறப்பிக்கப்படுவது
1. வானடி 2. பூ 3. ஆடவர் 4. பெண்டிர்

37. புசிக்கும் என்பதன் கருத்து
1. தோன்றும் 2. மறையும் 3. உண்ணும் 4. விரட்டும்

38. வாழைப்பூ பூசிக்கும் பூவல்ல. இங்கு இடம்பெற்ற பயனிலை
1. பூ 2. வாழைப்பூ 3. பூசிக்கும் 4. அல்ல

39. இங்கு இடம் பெற்ற பன்மைச் சொல் அல்லாதது
1. பூக்கள் 2. ஆடவர் 3. பெண்டிர் 4. வாழைப்பூ

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் பந்தி ஒன்றை அமைக்கலாம். பந்தியை அமைக்க பொருத்தமான வைப்புமுறை

அ) அப்படி தமிழர்கள் சித்திர எழுத்துக்களை எழுதி வந்த காலம் மிகப் பழைய காலம்
ஆ) அந்தப் பழங்காலத்தில் இந்தப் பெரிய நாடு முழுவதும் தமிழர்களே இருந்து வந்தார்கள்.
இ) பழங்காலத்தில் தமிழர்கள் சீனர்களைப் போலவே சித்திர எழுத்துக்களை எழுதி வந்தார்கள்
ஈ) ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் அது.
உ) புதை பொருள் ஆராய்ச்சியில் இந்த உண்மை தெரிகிறது.

i) அ, ஆ, இ,ஈ, உ
ii) இ, அ,ஈ,ஆ, உ
iii) இ,உ,அ,ஈ,ஆ
iv) இ,ஈ, உ, அ, ஆ

(40 x 1 = 40 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

## பகுதிII

01. சுருக்கமான விடை தருக.

1. வள்ளுவரின் மனிதன் ''இயற்கைக்கு எதிராக மனித சக்தியால் ஒன்றும் செய்ய இயலாது'' என்ற உண்மையை உணர்ந்தவன். இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?
2. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
   'விழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்'
3. இயேசுபிரான்'' வருத்தப்பட்டுப் பாசம் சுமப்பவர்களே! நீங்கள் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று அறுதியிட்டுக் கூறினார் இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடர், சார்புத் தொடர், நிரப்பித்தொடர் யாவை?
4. சிங்கத்தின் இளையது குஞ்சு இது எவ்வகை வழு
5. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக
   ''என்ன மச்சாள், ராத்திரி மணவறையிலை கூறைச் சீலையும் உடுத்து நகை எல்லாம் போட்டுத் தலையைக் குனிஞ்சு கொண்டு இருந்தீரே''
6. தொழில்முறைக் கடிதம் ஒன்றை எழுதுவதற்கான படிமுறைகளை ஒழுங்குபடுத்துக
   தலைப்பு, ஒப்பம், முகவரி, விளிம்பு, நன்றி, உள்முகவரி, ஒப்பம்
7. கவலையால் மெலிந்தான் இங்கு ஆல் உருபு உணர்த்தும் வேற்றுமைப் பொருள் யாது?
8. எதிர்கால இடைநிலைகளைக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக
9. சுருக்கம் ஒன்றை எழுதும் போது தவிர்க்க வேண்டியது மையக்கருத்தை வெளிப்படுத்தல், உதாரணந்தருதல், தொகைமொழி பயன்படுத்தல் தொடர்புபடுத்தல்
10. பின்வரும் பிரதேச வழக்குச் சொற்களின் நியம வழக்குச் சொற்களைத் தருக
    1. மருவம் 2. களவெட்டி

(10 x 2=20புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

1. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கல்வி வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறார்கள். பெண்கல்வி முறை இன்றைய யுகத்திற்கு அவசியமான ஒன்றாகும். அரசியலிலும் முக்கிய இடம் வகிக்கின்றனர். நாட்டுக்கும் வீட்டுக்கும் அவர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். எனவே பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பேணி அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வழி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் விளக்கக் கட்டுரை

2. அந்தப் பெரிய கல்லூரியில் கல்வி கற்கும் ஊர்வசி தானே கல்லூரியின் முதல்நிலை மாணவி என்பதனால் மமதையோடு வாழ்ந்தாள். அவளிடம் செருக்கும் ஆணவமும் நிரம்பிக் கிடந்தன. இதனால் அவளின் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டவர்கள் பலர். செல்வச் செழிப்பு மிக்க அவள் குடும்பத்தில் திடீரென ஏற்பட்ட உயிரிழப்பு, பொருள் இழப்பு…. அவளின் நிலைமையில் ஏற்பட்ட மாற்றம் இவற்றைச் சித்தரிக்கும் வகையில் அமைந்த கற்பசைன் சிறுகதை



kalvi.lk

3. இன்று மாணவர்கள் மத்தியில் சவால்களை எதிர்கொள்ளும் மனப்பான்மை குறைவடைந்து செல்கின்ற நிலை காணப்படுகின்றது. தோல்விகள் ஏற்படும் போது துவண்டு போகின்றனர். 'தோல்வியேவெற்றியின் முதற்படி' என்பதனை உணராதநிலை காணப்படுகின்றது. தன்னம்பிக்கையும் தளராத மனவுறுதியும் கொண்டவர்களாகவே இருந்தால், அவர்களால் சாதிக்க முடியாத செயல் என்று எதுவுமில்லை என்பதனை விளக்கி நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு

4. இலத்திரனியல் ஊடகங்களில் சமூக வலைத்தளம் பிரதான சாதனமாக விளங்குகின்றது. இது மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இதன் பாவனை மூலம் பல்வேறு பண்பாட்டுச் சீரழிவுகளும் ஏற்படுகின்றன. சமூக வலைத்தளங்களால் மாணவர்கள் பயனடைகிறார்கள் எனக்கருதும் ஒருவருக்கும், அவற்றினால் தீமைகளே அதிகம் ஏற்படுகின்றன எனக்கருதும் மற்றொருவருக்கும் இடையேயான உரையாடல்

(25 புள்ளிகள்)

03. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு எழுதுக? (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

தேனினும் இனிய நம் தமிழ்மொழில் புலவர் பலர் அரிய நூல்களை இயற்றி, மக்களை மகிழ்வித்துள்ளனர். அப்புலவர்கள் நுண்ணறிவு வாய்ந்தவர்கள். சிறந்த சொல்வளம் உடையவர்கள் அவர்கள் உரையாடும் போது நயமாகப் பசித் தம்முடனிருப்பவர்க்கு மகிழ்ச்சியளித்தாரகள். அதனால், புரவலர்கள் புலவர்கட்கு பொன்னும் பொருளும் வழங்கி அவர்களை ஆதரித்தார்கள். புலவர்களும் கவலையின்றி மொழி வளத்துக்காக உழைத்தார்கள். காவியம் பல செய்தார்கள். ஒரு நாட்டின் பெருமையைத் தெற்றென விளக்குவது நாட்டின் காவியமேயாகும். இவை தமிழகத்துக்குக் குன்றாத பெருமையைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. திருக்குறளும், சங்க நூல்களும், கம்பராமாயணமும் பெரியபுராணமும் இவற்றுள் சிலவாகும்.

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியைப் பண்டைக் காலத்தில் ஆண்பாற் புலவர்கள் மட்டுமன்றி, ஔவையார், காக்கைப்பாடினியார்,காரைக்காலம்மையார் போன்ற பெண்பாற் புலவர்களும் கண் போல காத்து வளர்த்தனர். பழங்காலத்தைப் போலவே அண்மைக்காலத்திலும் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் தமிழின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டுள்ளனர் எனக் கூறுவதில் தவறேதுமில்லை.

(10புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாடகம் இலக்கிய வகைகளுள் முக்கியமானதொன்று இது பாவாலும் அமையலாம். உரைநடையாலும் அமையலாம் இன்றைய சனநாயக உலகில் நாடகங்கள் பொதுமக்களுக்கு இலகுவாக விளக்கும் உரை நடையிலேயே பெரும்பாலும் ஆக்கப்பட்டு



kalvi.lk

வருகின்றன. இவற்றுள் சில படிப்பதற்கு மட்டும் உரியன வேறு சில மேடை அனுபவம் ஒன்று மட்டுமே கொண்டு இலக்கியப் பயிற்சி இல்லாதாரால் எழுதப்படுகின்றன. இன்னுஞ் சில நாடகங்கள் நடிப்பதற்கும், படிப்பதற்கும் ஒருங்கே உரியன. இவ்வகை நாடகங்களே கலைச் சிறப்படையன. அவை பார்வையாளரது உணர்ச்சியைத் தூண்டி உள்ளத்தில் புதைந்து கிடைக்கும் வேட்கைகளுக்கு விடுதலை அளித்து, அன்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்தி, மக்களைப் பண்படுத்தும் மகத்தான பணியைச் செய்ய வல்லன.

நல்ல நாடகம் எழுவதுவது ஏனைய சில இலக்கிய வகைகளை எழுதுவது போன்று அத்துணை இலகுவான செயலன்று. முதலிருந்து முடிவுவரை நாடக நிகழ்வுகள் யாவும் உரையாடல்களாக இருக்க வேண்டியதே இதற்குக் காரணம், நாவல், சிறுகதை போன்றவற்றிற் போல எழுத்தாளர் இடையில் புகுந்து கதை சொல்வதற்கும் காரண விளக்கங்கள் கூறுவதற்கும் வருணனை தருவதற்கும் நாடகத்தில் இடமில்லை. கள அமைப்பு, உடையலங்காரம் போன்ற சில குறிப்புக்களை மாத்திரம் காட்சிகளின் தொடக்கத்தில் எழுத்தாளர் தமது மொழியாகத் தரலாம். ஆனால் அவையும் அடைப்புக் குறிப்புக்குள்ளே இடப்பட்டு வேறுபடுத்திக் காட்டப்படும் எழுத்தாளர் தாம் உருவாக்கும் பாத்திரங்களில் புகுந்து நின்றே யேசுதலும் செயல்புரிதலும் வேண்டும். இதுவே அவனின் வெற்றியுமாகும்.

1. கலைச் சிறப்புடைய நாடகங்களின் பணி யாதெனக் கூறப்பட்டுள்ளது?
2. நாடகங்கள் அமையப்பெறும் இருவகைகளையும் குறிப்பிடுக?
3. ஏனைய இலக்கியங்களில் இருந்து நாடகம் எவ்வகையில் வேறுடுகின்றது?
4. நாடக எழுத்தாளர் தமது மொழியாத் தரக்கூடிய விடயங்கள் எவை?
5. நாடக எழுத்தாளருக்கு வெற்றி தரும் விடயம் எது?

(10 புள்ளிகள்)

05. உமது கிராமத்தின் மாதர் சங்கச் செயலாளர் என்று உம்மைக் கருதிக்கொண்டு உமது கிராமத்தில் இடம்பெற இருக்கும் மகளிர் தின விழாவிற்கு பெண் உயரதிகாரி ஒருரைப் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உலகை உலுக்கி வரும் ஆட்கொல்லி நோயாக இன்று கொரோனா வைரஸ் காணப்படுகின்றது. இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நூறு சொற்களில் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதிIII

அறிவுறுத்தலுக்கேற்ப 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை தருக

01. சுருக்கமான விடை தருக

i) “தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டூகம்……..”

i. தாமரையுடன் கூட வாழ்வது எது?

ii. இங்கு மண்டூகமாக கருதப்படுவது யார்?

ii) “மடைத்தலையில் ஓடுமீன் ஓட………”

i. மடைத்தலை என்பதன் பொருள் யாது?

ii. இப்பாடலடி இடம்பெற்ற நூல் யாது?

iii) “கணகாயரில்லாத ஆரும் பிணக்கனுக்கு
மூத்தோரை யில்லா அவைக் எனனும்…”

i. கணக்காயர் என குறிப்பிடப்படுபவர் யார்?

ii. பிணக்கறுத்தல் என்பதனால் நீர் விளங்குவது யாது?

iv) “பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர்”

i. பழுத்த வழக்கறிஞர் என்பதனால் நீர் கருதுவது யாது?

ii. இக்கட்டுரை இடம்பெறும் கட்டுரை யாது?

v) “அவர் அந்த வலியை அங்க வஸ்திரத்தில் அவாகணம் பண்ணிப் பக்கத்தில்…………”

i. இங்கு அங்கவஸ்திரம் குறிப்பது யாது?

ii. ஆவாகணம் பண்ணுதல் என்பதன் பொருள் யாது?



kalvi.lk

vi) “முன்பின் காணாத கேளாத கூட்டம் அது”

i. அக்கூட்டத்திற்கு இட்ட பெயர் யாது?

ii. கூட்டத்திற்கு வருகை தந்தோர் யாவர்?

vii) “யாத்த தேருருளைப்படு மேழை தான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்”

i. மேழை என்பதன் பொருள் யாது?

ii. இங்கு இடம் பெற் அணி யாது?

viii) “விலங்கு யற்கை யிலை யெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற வாகுமே”

i. விலங்கியற்கை என்பதன் கருத்து யாது?

ii. இப்பாடலடி இடம்பெறும் கவிதைப் பகுதி யாது?

ix) “பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்
புவன ழிந்தொரு புத்துயிர் ரெய்துவேன்”

i. புத்துயிர் எய்துவேன் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?

ii. புத்துயிர் எய்த காரணம் யாது? எனக் குறிப்பிடுகின்றார்?

x) “வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய”

i. இங்கு இடம் பெறும் அணி யாது?

ii. இவ்வஅணி இடம்பெறும் தொடரைக் குறிப்பிடுக?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

i) உப்பிலாக் கஞ்சியினையுண்ணு மறுசுவை போக
தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒட்டிய
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வா
மனங்கொண் டது மாளிகை

i. இங்கு இடம்பெற்ற முதுமொழி யாது?

ii. முதுமொழியின் கருத்து எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

ii) யானை அணையவர நான்பொரீகி நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்திருந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

i. தீயோர் நட்பு எவ்வாறானது?
ii. நல்லோர் நட்பு எவ்வாறானது?

iii) விதியைய நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிற்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியி னிற்புலை நாத்திகள் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென வோர்ந்திடாது
கண்ணிலாதவர் போலத் திகைப்பர் காண்

i. விரும்பியதை பெ முடியாதவரின் செயல்கள் எவை?
ii. இங்கு இடம்பெற்ற அணியினை இனங்கண்டு விளக்குக

iv) கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள சம்பு - இல்லாத சம்பு – வாள் - சக்கரம் இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கின்ற சமயம் அந்தச் சமயம் பிறிற்றோ கட்லிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள் நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது. பிறிற்றோவை ஆகாயத்திலே தூக்கிக் கொண்டு போய் வைத்து விட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது விசுவநாதபிள்ளையும நிலை தளர்ந்து போனார்.

i. பிறிற்றோவுக்கு சார்பாக வந்தவர்கள் யார்?
ii. விசுவநாத பிள்ளை நிலை தளர்ந்ததற்கு காரணம் யாது?

v) வாதத்துக்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக் கொண்டு வெளியே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக் கொள்ள் வழிவகைகளின்றித் தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக் கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழதழத்தது. ‘‘பிறிற்றோ தக்கவர் அல்லது’ என்று தாமே சொல்லி



kalvi.lk

சமாதானப்பட்டுக் கொள்வார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிற்றோவின் பிரதிநிதித்துவக் கதை நின்று விட்டது.

i. வெளியே சென்றவர்கள் உள்ளே வராததற்கு காரணம் யாது?

ii. உள்ளே இருந்தவர்களின் செயற்பாடு எவ்வாறு அமைந்திருந்தது?

(4 x 5 = 20 புள்ளிகள்)

03. 'நாவலர்'எழுந்தார் என்ற கட்டுரையில்
அ) நாவலரின் நேர்மை
ஆ) நாவலரின் திறமை புலப்படுமாற்றை விளக்குக

**அல்லது**

"தேம்படு மனையின் திரள் பழத்தொரு விளக............" என்ற பாடலில்
அ) பாடலின் பிரதான கருத்தினையும்
ஆ) அணிப் பயன்பாட்டினையும் விளக்குக

(15 புள்ளிகள்)

04. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்
அ) விசுவநாத பிள்ளையின் ஆளுமைகள்
ஆ) பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள் விளக்குக

**அல்லது**

"பாரதியார் சுயசரிதையை" அடிப்படையாகக் கொண்டு,
அ) காதலிக்காய் காத்திருந்த விதம்
ஆ) அவள் பார்வை கிட்டியதால் ஏற்பட்ட மகிழ்வு விபரிகப்படுமாற்றை விளக்குக

(15 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஒன்றினைத் தெரிவு செய்க**

05. "இனியவை நாற்பது" என்ற நீதிப்பாடலில் சுட்டும் இனிய செயல்கள்

(10 புள்ளிகள்)

06. "நாவலர் எழுந்தார்" என்ற கட்டுரையில் "பொழிந்த நெய்யாகுதி பொங்கி….." என்ற பாடல் இடம்பெற்றமைக்கான காரணம்

(10 புள்ளிகள்)

07. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையின் மொழி நடைச் சிறப்பினை விளக்குக

(10 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**